**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP .No.109/2023</u>**

**<u>நாள் : 02.03.2026</u>**

**எ.ம.சா.** 2 (2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சீனிவாசன் | மாவட்டம் | : | வேலூர் |
| தந்தை பெயர் | : | திரு.சின்ன எல்லன் | வயது | : | 55 |
| ஊர் | : | பேர்ணாம்பட்டு | தொழில் | : | உதவி மேலாளர் |
| வட்டம் | : | பேர்ணாம்பட்டு | தேசியம் | : | இந்தியன் |

**முதல் விசாரணை:**

நான் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனியில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். அந்த வகையில் வழக்கு சம்பந்தப்பட்ட விவரங்கள் எனக்கு பரிச்சையம். 2ஆம் எதிர்மனுதாரர் சார்பாக இந்த வழக்கிற்கான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1)TN 23 BT 1125 என்ற டிவிஎஸ் வாகனத்தின் பாலிசி நிபந்தனைகள் அடங்கிய தொகுப்பு ஆன்லைன் நகல் எ.ம.சா.ஆ.4

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

TN 23 BT 1125 என்ற டிவிஎஸ் சூப்பர் எக்செல் வாகனம் எங்களது நிறுவனத்தில் முறைப்படி காப்பீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். 17.03.2022 முதல் 16.03.2023 வரை மேற்படி வாகனத்திற்கு காப்பீடு அமலில் இருந்தது என்றால் சரிதான். அந்த வகையில் வாகனமானது மோட்டார் வாகன திருத்த சட்டம் 01.04.2022க்கு முன்பே காப்பீடு செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் ஆவணரீதியாக தெரியும் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் பார்வையிட்ட

ஆவணங்களான முதல் தகவல் அறிக்கை, மோட்டார் வாகன ஆய்வறிக்கை, புலனாய்வு அறிக்கை, நிறுவனத்தின் பாலிசி நிபந்தனைகள் ஆகும். முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கையில் TN 23 BT 1125 என்ற டிவிஎஸ் சூப்பர் எக்செல் வாகனம்தான் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து நடந்து சென்ற மனுதாரர்மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சி பின்னிட்டு வாகன எண் தவறாக குறிப்பிட்டு பின்னிட்டு திருத்தப்பட்ட அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறுகிறார் (அது ம.சா.ஆ.2 ஆக ஆவணக்கோப்பில் உள்ளது) நான் நிரூபண வாக்குமூலத்தில் பாரா–3ல் சொல்லியுள்ள விவரங்களுக்கு எந்தவொரு ஆதாரமும் இல்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனத்திற்குண்டான முழுமையான பிரிமியம் செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களது நிறுவனம் பொதுமக்கள் நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட அரசு பொதுத்துறை நிறுவனம் என்றால் சரிதான். எங்களது நிறுவனம் நல்ல லாபத்தில் இயங்கிய வருகிறது என்றால் சரிதான். இந்த வழக்கில் மருத்துவரை சாட்சியாக விசாரித்தது எனக்கு தெரியாது. 30.10.2025ல் திருப்பத்தூர் அரசு மருத்துவரை ம.சா.2 ஆக விசாரிககப்பட்ட நிலையில் விபத்து ஏற்பட்ட அதே நாளில் மருத்துவமனையில் அட்மிட் ஆனதாக விபத்து பதிவேடு தாக்கல் செய்யப்பட்டு ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மனுதாரர் படிப்பறிவற்ற பாமர ஏழை என்பதால் உடனடியாக மருத்தவமனைக்கு சென்று தனது உயிரை காப்பாற்றிக்கொண்டாரே தவிர புகார் கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் தோன்றவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் எங்களது காப்பீட்டு நிறுவனத்திற்கு மூன்றாம் தரப்பினர் என்றால் சரிதான். எங்களிடம் காப்பீடு எடுத்துள்ள TN 23 BT 1125 என்ற வாகனம் விபத்தை எற்படுத்தியுதால் மனுதாருக்கு எங்களது நிறுவனம் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டது என்றால் சரியல்ல. 2ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணிபுரிவதால் எங்களது நிறுவனத்திற்கு ஆதரவாக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

மனுதாரர் விபத்து சமயத்தில் சாலையில் வரும் வாகனங்களை கவனித்து சென்றிருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எங்களது நிறுவனத்தில் இருசக்கர வாகனம் காப்பீடு செய்யப்பட்டிருந்ததால்

மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு எங்களது நிறுவனம் காப்பீடு கொடுக்க கடமைப்பட்டது என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.